DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.255/2023**

**prosecution witness: Pw - 1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சுதா | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**08.11.2023**

முதல் விசாரணை:-

1. நான் மண்டபத்தில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 01.03.2023ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நானும், எனது இளைய மகன் சபரி இருவரும் வீட்டில் இருந்து மார்கெட்டிற்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது புளியம்பட்டி அருகே நாங்கள் சென்ற போது ஆஜர் எதிரி போதையில் வந்து பைக்கை கொண்டு எங்கள் மீது மோதுவது போல் வந்தார்.

2. நான் சத்தம் போட்டேன். அதன்பின்பு எதிரி யாரை சொன்னடி தேவடியா என்று அசிங்கமாக பேசி என் சேலையை பிடித்து இழுத்தார். அதில் எனக்கு கழுத்து பகுதியில் காயம் ஏற்பட்டது. நான் தடுக்க போகும் போது எதிரி எனது வலது கண்ணில் குத்திவிட்டார். அங்கு இருந்த ஸ்மாயில் என்பவரும் மற்ற நபர்களும் எதிரியை சத்தம் போட்டு விலக்கிவிட்டார்கள். அதன்பிறகு மறுநாள் என் கணவர் கடலுக்கு போய்விட்டு வந்தபின்னர் அவரிடம் மேற்படி சம்பவத்தை கூறி மண்டபம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம்.

3. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியாது. புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என்று விபரம் எனக்கு தெரியாது எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் அவருக்கும் படிக்க தெரியாது. வழக்கு சம்பந்தமாக, சம்பவத்தன்றே போலீசார் எங்களிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் இல்லை எழுதி தான் வாங்கினார்கள். சம்பவம் நடந்து 1/2 மணி நேரத்தில் எங்களிடம் போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கிசென்றார்கள் என்றால் சரிதான்.

2. சம்பவம் நடந்த நாளுக்கு பின்பு போலீசார் தனியாக என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். காயங்கள் இருந்தால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்வது தான் வழக்கம் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சம்பந்தமாக நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்கனவே தகராறு ஏற்பட்டு எதிரியின் தாயார் என் மீது புகார் கொடுத்து மண்டபம் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை.

3. எனது கணவர் தான் எதிரியின் அம்மாவிடம் இடம் சம்பந்தமாக பிரச்சனை செய்து வந்தார் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக எதிரியும், அவரது அப்பாவும் கேட்டதற்கு தான் எதிரி மீது பொய்யாக இந்த புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் சம்பவம் நடந்த 1/2 மணி நேரத்தில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல மறுநாள் தான் போனேன். இந்த வழக்கு சம்பந்தமான விசயங்கள் எல்லாம் எனது மகன் தான் காவல் நிலையத்தில் சொன்னார் என்றால் நானும், எனது மகனும் சொன்னோம்.

4. நான் புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும், பொது இடத்தில் வைத்து பேசியதாகவும், வாகனத்தை வைத்து ஏற்ற வந்ததாகவும், மானபங்கம் படுத்தியதாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனது கணவர் மீது புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு யோசித்து எனது கணவர் என்னை வைத்து நடக்காத சம்பவத்திற்கு பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No.255/2023**
**prosecution witness: Pw - 2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present
வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சபரிகரன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**08.11.2023**
முதல் விசாரணை:-

1. நான் மண்டபத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 13 வயது ஆகிறது. அ.சா.1 எனது அம்மா ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 01.03.2023-ம் தேதி 10.30 மணியளவில் நானும், எனது அம்மாவும் எங்கள் வீட்டில் இருந்து பஜாருக்கு சென்றோம்.அப்போது பொங்காலி தெரு சந்திற்கு அருகில் நாங்கள் சென்ற போது ஆஜர் எதிரி என் அம்மாவின் மீது பைக்கை மோதுவது போல் வந்தார்.உடனே என் அம்மா எதிரியை பார்த்து திட்டினார்.

2. அதன்பிறகு எதிரி திரும்ப வந்து என் அம்மாவை யாரடி சொன்ன தேவடியா என்று அசிங்கமாக பேசினார். என் அம்மாவின் சேலையை பிடித்து இழுத்தார். என் அம்மா செறுப்பை வைத்து எதிரியை அடித்தார். உடனே ஆஜர் எதிரி என் அம்மாவின் வலது கண்ணில் கையால் குத்திவிட்டார். அப்போது இஸ்மாயில்மற்றும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்த விலக்கிவிட்டார்கள். அதன்பிறகு என் அப்பா கடலில் இருந்து வந்தவுடன் 02.03.2023ம் தேதி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது சொன்னது போலீசார் சொல்லிகொடுத்து தான் சொன்னேன் என்றால் சரிதான். ஏற்கனவே பீோலுசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால

சரிதான். செறுப்பால் அடித்தத விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எதிரியும், அவரது அம்மாமவும் எங்கள் வீட்டிற்கு வந்து ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டபோது என் அம்மா செறுப்பை கழட்டி அடித்தார் என்றால் இல்லை.